**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 10 ம் நாள் செவ்வாய்கிழமை**

**சுருக்கு வழக்கு எண்.06/2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | வாலிநோக்கம் காவல் நிலைய குற்ற எண்.95/2021. |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | முகமது ரியாஸ் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | அப்துல் ரசாக் |
| 4. | வயது | 35/2021 |
| 5. | தொழில் | மீன்பிடி தொழில் |
| 6. | முகவரி | வாலிநோக்கம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். |
| **2 வது எதிரியின் விபரம்** | | |
| 7. | பெயர் | அப்துல்லா புஹாரி |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | உசைன் அலி |
| 9. | வயது | 29/2021 |
| 10. | தொழில் | மீன்பிடி தொழில் |
| 11. | முகவரி | வாலிநோக்கம், கடலாடி தாலுகா. |
| **3 வது எதிரியின் விபரம்** | | |
| 12. | பெயர் | முகமது ஹுதைபா |
| 13. | தகப்பனார்/கணவர் பெயர் | ரூஹில்லா |
| 14. | வயது | 22/2021 |


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:25 +0530

| | | |
|---|---|---|
| 15. | தொழில் | மீன்பிடி தொழில் |
| 16. | முகவரி | வாலிநோக்கம், கடலாடி தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| **4 வது எதிரியின் விபரம்** | | |
| 17. | பெயர் | உம்முல் ஷரிபா |
| 18. | தகப்பனார்/கணவர் பெயர் | முகமது ரியாஸ் |
| 19. | வயது | 28/2021 |
| 20. | தொழில் | - |
| 21. | முகவரி | வாலிநோக்கம், கடலாடி தாலுகா. |
| **5 வது எதிரியின் விபரம்** | | |
| 22. | பெயர் | ஹக்குல்லா |
| 23. | தகப்பனார்/கணவர் பெயர் | அப்துல் அஜுஸ் |
| 24. | வயது | 32/2021 |
| 25. | தொழில் | |
| 26. | முகவரி | வாலிநோக்கம், கடலாடி தாலுகா. |
| 27. | சம்பவ நாள் | 16.10.2021 ம் தேதி 16.00 மணி |
| 28. | புகார் தேதி | 26.10.2021 ம் தேதி 20.00 மணி |
| 29. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 18.01.2021 |
| 30. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | (நிலையப்பிணை) 18.01.2021 |
| 31. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 32. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 09.01.2025 |
| 33. | விசாரணை முடிவுற்ற நாள் | 09.03.2026 |
| 34. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | 1, 2, 3, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 147 ன் கீழ், 5 வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 147, 294(b)ன் கீழ் |



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:28 +0530

| | | |
|---|---|---|
| | வினவப்பட்ட குற்றம் | 1, 2, 3, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 147 ன் கீழ், 5 வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 147, 294(b)ன் கீழ் |
| 35. | காலதாமதத்திற்கான காரணம் | - |
| 36. | அரசு தரப்பு சாட்சிகள் | <table><tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr><tr><td>அ.சா.1</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr><tr><td>அ.சா.4</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr><tr><td>அ.சா.5</td><td>07.03.2026</td><td>07.03.2026</td></tr></table> |
| 37. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 09.03.2026 |
| 38. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 39. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | - |
| 40. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.A.ராஜன் |
| 41. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.L.ஹசன் முகமது |
| 42. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 43. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 10.03.2026 |
| 44. | வழக்கின் முடிவு குறித்து | 10.03.2026 |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:32 +0530

| | | |
|---|---|---|
| | எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | |
| 45. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 1, 2, 3, 4 வது எதிரிகள் இ.த.ச. பிரிவு 147 ன் கீழும், 5 வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 10.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 1 திரு.A.ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.ஹசன் முகமது அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:35 +0530

**தீர்ப்புரை**

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. வழக்கின் புகார்தாரரும், எதிரிகளும் உடன் பிறந்தவர்கள் என்றும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் சொத்து பிரச்சனை காரணமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில், 16.10.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் 1 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து தென்னை மரத்தில் உள்ள தேங்காயை பறித்தும், 5 வது எதிரி புகார்தாரரைப் பார்த்து உங்களை எல்லாம் மொட்டை கட்டையாக்காமல் விடமாட்டேன் என்று அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக 1, 2, 3, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 147 ன் கீழ், 5 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 09.01.2025 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 02.03.2026 ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 251 ன் கீழ் 1, 2, 3, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 147 ன் கீழ், 5 வது


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:39 +0530

எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)ன் கீழான குற்றத்தின் சாராம்சம் குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 254–ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 6 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அ.சா.1, அ.சா.2 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகள் அ.சா.3, அ.சா.4 ஆகவும், கூடுதல் சாட்சியாக நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.5 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். புலன் விசாரணை அதிகாரிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 5 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், பட்டியல் சாட்சி – 1 ரகுமத்துல்லா அ.சா.1ன் தந்தை என்றும், அவர் இறந்து 10 நாட்கள் ஆகிறது என்றும், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது,

சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் விபரம் பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.1ன் அப்பா எதற்காக இந்த புகார் கொடுத்தார் என்று எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் விபரம் பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.2ன் அப்பா எதற்காக இந்த புகார் கொடுத்தார் என்று எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

7. பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றும், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

8. அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 26.10.2021ம் தேதி 20.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவர் வாலிநாக்கம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரகுமத்துல்லா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு (அ.சா.ஆ.1) பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.95/2021 பிரிவுகள் 147, 294(b), 379(NH) இ.த.ச.-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.2) பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தினத்தில் 20.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஐதர் அலி மற்றும் நிஜார் அலி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம்


Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:48 +0530

(அ.சா.ஆ.4) தயார் செய்துள்ளார் என்றும், சம்பவ சாட்சிகளான ரகுமத்துல்லா, ஹபீப்புல்லா, சம்சீத் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அத்துடன் அவர் பணிமாறுதல் சென்று விட்டபடியால் நிலையப் பொறுப்பில் வந்த சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதன் என்பவர் இவ்வழக்கினை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்சொன்ன சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் அதே சங்கதிகளை கூறியதால் புதியதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரிகளான முகமது ரியாஸ், அப்துல்லா புகாரி, முகமது ஹுதைபா, உம்முல் சரிபா, ஹக்குல்லா ஆகியோர்களை 18.01.2021 ம் தேதியன்று கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்துள்ளதாகவும், இவ்வழக்கின் தன்மைக்கேற்ப பிரிவுகள் 379( NH) இ.த.ச.-வினை நீக்கம் செய்து 147, 294(b) இ.த.ச.வாக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளார் என்றும், அத்துடன் வழக்கு விசாரணை முடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதன் என்பவரை விசாரணை செய்து எதிரிகள் முகமது ரியாஸ், அப்துல்லா புகாரி, முகமது ஹுதைபா, உம்முல் சரிபா, ஹக்குல்லா ஆகியோர் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:51 +0530

07.03.2026ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

## தீர்வு

11. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 5 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

12. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.5 தவிர இதர

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:33:54 +0530

சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

13. அ.சா.5 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, 16.10.2021ம் தேதி மாலை 04.00 மணியளவில் 1 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து தென்னை மரத்தில் உள்ள தேங்காயை பறித்தும், 5வது எதிரி புகார்தாரரைப் பார்த்து உங்களை எல்லாம் மொட்டை கட்டையாக்காமல் விடமாட்டேன் என்று அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு (அ.சா.ஆ.1) அளிக்கப்பட்டுள்ளது.

14. சம்பவம் குறித்து அ.சா.1ன் தகப்பனார் புகார் மனு (அ.சா.ஆ.1) அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது, சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் விபரம் பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.1ன் அப்பா எதற்காக இந்த புகார் கொடுத்தார் என்று எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1ன் தகப்பனார் அளித்த புகார் மனு (அ.சா.ஆ.1) மற்றும் அதனடிப்படையில் பதிவு

செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.2) ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.5 தவிர புலன் விசாரணை அதிகாரிகள் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள்தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 1, 2, 3, 4 வது எதிரிகள் இ.த.ச. பிரிவு 147 ன் கீழும், 5 வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 294(b)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

18. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:34:03 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் தேதி செவ்வாய்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:34:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | ஹபிஜுல்லா |
| அ.சா.2 | சம்சீத் |
| அ.சா.3 | ஐதர் அலி |
| அ.சா.4 | நிஜார் அலி |
| அ.சா.5 | ரெத்தினவேல் |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 26.10.2021 | புகார் மனு |
| Ex.P.2 | 26.10.2021 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.3 | 26.10.2021 | பார்வை மகஜர் |
| Ex.P.4 | 26.10.2021 | மாதிரி வரைபடம் |
| Ex.P.5 | 26.10.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.10 12:34:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**குறிப்பு:-**

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.